மாலை மலர் சென்னை
18-2-2020

### தேசிய பால் பேட்மிண்டன் போட்டி

# ஒடிசா-மணிப்பூர் அணிகள் வெற்றி

65-வது சீனியர் தேசிய பால் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி ஓ.எம்.ஆரில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் நேற்று தொடங்கியது. இதில் 1,200 க்கும் மேற்பட்ட வீரர்-வீராங் கனைகள் பங்கேற்றனர். இப்போட்டியை அர்ஜூனா விருதை வென்ற செபாஸ்டி யன் சேவியர் தொடங்கி வைத்தார். செயின்ட்ஜோசப் கல்விக்குழும சேர்மன் பி.பாபு மனோகரன் இயக்கு னர் சசிசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் ஒடிசா அணி குஜராத்தை 35-21, 35-14 என்ற கணக்கில் வீழ்த்தியது. மேற்கு வங்காளம் அணி 35-22, 35-26 என்ற கணக்கில் அட்டாமிக் எனர்ஜி அணியை தோற்கடித்தது. பெண்கள் பிரிவில் மேற்கு வங்காளம், மணிப்பூர், ஒடிசா, இஸ்ரோ அணிகள் வெற்றி பெற்றன.

19.02.20